பினாங்கு முதல்வரும் ஜசெக தலைமைச் செயலாளருமான லிம் குவான் எங்கின் தீபாவளி சிறப்புரை

மலேசியாவில் வாழும் அனைத்து இந்து மக்களுக்கும் எனது இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துகள். இத்தீபத் திருநாள் அனைவரின் மனதிலும் மகிழ்ச்சியையும் அமைதியையும் ஒற்றுமையையும் கொண்டு வரவேண்டும். தீமை தோற்று நன்மை வென்ற தீபாவளி நன்நாளை சாதி, மத, இன வேறுபாடின்றி நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாட வேண்டும்.

மக்கள் கூட்டணி ஒற்றுமையின் மீது நம்பிக்கை வைத்துள்ளது. ஒருவரின் மீது ஒருவர் பழி சுமற்றி உழல்வதை விட பிரச்சனைகளைச் சுமூகமான முறையில் கலந்துரையாடித் தீர்ப்பதையே விரும்புகிறது.

அனைத்து மலேசியர்களுக்கும் இன மத வேறுபாடின்றி சரிசமமான உரிமையும் வாய்ப்புகளும் உண்டு. இதனை யாராலும் மறுக்கவோ தட்டிப் பறிக்கவோ முடியாது. மக்கள் கூட்டணியில் இணைந்திருக்கும் மற்ற கட்சிகளுக்கு சில விடயங்களில் வேறுப்பட்ட கருத்துகள் இருக்கலாம். இருப்பினும் ஒன்றுபட்ட மக்களையும், ஒன்றுபட்ட நாட்டையும் உருவாக்குவதே எங்களின் நோக்கம்.

அம்னோ அரசியல்வாதிகள் மக்களைக் குழப்பக்கூடிய வகையில் அறிக்கை விடுகின்றனர். தங்களின் அரசாங்க குறிக்கோளினை அடைவதற்கு மலாய்க்காரர் அல்லாதவர்களின் வாக்குகள் தங்களுக்குத் தேவையில்லை என்று அம்னோ அரசியல்வாதி ஒருவர் கூறினார். அதே அம்னோவைச் சேர்ந்த மற்றொருவர் மலாய்க்காரர் அல்லாதவர்களின் பங்களிப்பு இல்லாவிட்டால் மலேசியா இருண்ட எதிர்காலத்தையே கொண்டிருக்கும் என்கிறார். இதனைவிட மோசம் என்னவென்றால், இந்திய மக்களின் ஆதரவினைத் திரட்டிய அரசியல்வாதியே இந்தியர்கள் கழுத்தில் சங்கிலி அணிவதால் அவர்களை நாய் என்று இகழ்ந்த பள்ளி முதல்வரின் மீது எவ்வொரு நடவடிக்கையும் எடுக்காமல் மவுனம் காத்தார்.

மக்கள் கூட்டணிக்கு அனைத்து இன மக்களின் ஆதரவும் தேவை. ஏனெனில், அனைவருடனும் சேர்ந்து உழைப்பதன் மூலமாகவே நியாயமான, பிளவுபடாத சமூகத்தை நம்மால் உருவாக்க முடியும்.

மக்கள் கூட்டணியில் உள்ள கட்சிகள் ‘அனைவருக்கும் நீதி’, ‘அனைவருக்கும் ‘பாஸ்’’ ‘முதன்மை மலேசியா’ என பல்வேறு முழக்கங்களைக் கொண்டிருக்கிறது. முழக்கங்கள் வெவ்வேறாக இருப்பினும் எங்கள் இலக்கு, இலட்சியம் அனைத்து ஒன்றுதான்.

எந்தவொரு குறிப்பிட்ட இனத்திற்குள்ளும் சமயத்திற்குள்ளும் எங்களை நாங்கள் வரையறுத்துக்கொள்ளவில்லை. இந்தியர், சீனர், மலாய்க்காரர், கடசான், இபான் என்று பல்லினமாக வேறுபட்டு இருப்பதனால் ஒதுக்கப்படுவதையும் நாங்கள் ஆதரிக்கவில்லை. சரிசமமான வாய்ப்பு, வசதி, நீதி, சுதந்திரம் ஆகியவற்றை அனுபவிக்க அனைத்து மலேசியர்களுக்கும் உரிமை உண்டு.

மிக முக்கியமாக, தீய பழக்கவழக்கத்தைக் கொண்டவர்களையும், தீய எண்ணத்துடன் செயல்படுவோரையும் நாம் தண்டிக்க வேண்டும். தீயவர்களுக்குத் தண்டனை வழங்காமல் நல்லவர்களுக்கு எவ்வாறு சன்மானம் வழங்க இயலும்?

நாம் மைக்கா ஹோல்டிங்ஸ் போன்ற பல சர்ச்சைகளில் மாட்டிக்கொண்டு தவிக்கிறோம். இந்த நேரத்தில் 5 பில்லியன் செலவிலான 100 மாடி ‘மெனாரா வாரிசான் மெர்டேகா’ கட்டிடமும், 65 மில்லியன் செலவில் பிரதமர் வீட்டை சரிசெய்யவும் பணம் ஒதுக்குவது அவசியமா?

ஒற்றுமையான சரிசமமான மலேசியாவை உருவாக்க அனைவரையும் நாங்கள் அழைக்கிறோம். இன்னனும் சுதந்திரமற்று, அதிருப்தியிலும் ஏமாற்றிலும் இன அரசியல் நடத்துவாரோடு இணைய வேண்டாம்.

இத்தீபத் திருநாள் நமது குறிக்கோளினை நோக்கி வெற்றிநடைப் போட வழிக்காட்டலாய் அமையட்டும். தீபாவளி நல்வாழ்த்துகள்.

லிம் குவான் எங்